# பைறசினமைட் (பி.சற்.எ)
# Pyrazinamide (PZA)
## Tamil




**காசநோயாளர் மருந்து உட்கொள்ளல் வழிகாட்டி**

### பைறசினமைட் (பி.சற்.எ) என்பது என்ன?

பைறசினமைட் (பி.சற்.எ) என்பது நோய்க்கிருமிகளை ஒழிக்கும் ஒரு மருந்து. இது இரு வழிகளில் பயன்படுத்தப்படுகிறது:

1. இயக்கமற்ற (ஒடுங்கியிருக்கும்) காசநோய்க்குச் சிகிச்சை அளிப்பதற்கு
2. காசநோயைக் குணப்படுத்துவதற்கு (அதற்காக வேறு மருந்துகளோடு சேர்த்து உட்கொள்ளப்படுவது)

காசநோய்க் கிருமிகள் மிகவும் வலுவானவை. அவற்றை ஒழிப்பது கடினம். காசநோய்க் கிருமிகளைக் கொன்று, காசநோயைக் குணப்படுத்துவதற்கு இந்த மருந்தை நீங்கள் இரண்டு மாதங்களுக்கு அல்லது இன்னும் அதிக காலத்துக்கு உட்கொள்ள வேண்டும். இந்த மருந்தை நீங்கள் திட்டவட்டமாக எத்தனை மாதங்கள் உட்கொள்ள வேண்டும் என்பதை உங்கள் மருத்துவரே தீர்மானிப்பார்.

### நான் இந்த மருந்தை எப்படி உட்கொள்ள வேண்டும்?

- நீங்கள் இந்த மருந்தை ஒவ்வொரு நாளும் **அல்லது** உங்கள் மருத்துவர் அறிவுறுத்தியவாறு உட்கொள்வது மிகவும் முக்கியம்.
- **நீங்கள் மருந்து உட்கொள்வதை நிறுத்தினால், அதனை உடனடியாக உங்கள் மருத்துவரிடம் தெரிவிக்கவும்.**
- நீங்கள் ஒரு தடவை மருந்து உட்கொள்ளத் தவறினால், கூடிய சீக்கிரம் அதனை மீண்டும் உட்கொள்ளவும். ஆனால் ஒரே தடவையில் இரு தடவைகளுக்குரிய மருந்தை உட்கொள்ளலாகாது.
- இந்த மருந்தை வெறுவயிற்றில் உட்கொள்ள முயலவும். அதனால் வயிற்றுக் குழப்பம் ஏற்பட்டால், உணவுக்குப் பின்னர் உட்கொள்ளவும்.
- நீங்கள் உட்கொள்ளும் அல்லது உட்கொள்ளப் போகும் வேறு மருந்துகள் பற்றி உங்கள் மருத்துவரிடம் தவறாது தெரிவிக்கவும்.
- நீங்கள் கர்ப்பிணியாக அல்லது பாலூட்டும் தாயாக இருந்தால் இந்த மருந்தை உட்கொள்வதற்கு முன்னர் உங்கள் மருத்துவருடன் கலந்தாலோசிக்கவும்.
- (பி.சற்.எ) மருந்தை ஓர் உலர்ந்த குளிர்மையான இடத்தில் வைத்தெடுக்கவும்.

இந்த மருந்தை உட்கொள்ளும் காலத்தில் மதுபானம் **அருந்த வேண்டாம்.** அருந்தினால் உங்கள் ஈரல் பாதிக்கப்படக்கூடும்.

சிகிச்சை இடம்பெறும் முதல் இரு மாத காலத்துக்கு மாத்திரமே அநேகர் இந்த மருந்தை உட்கொள்வார்கள். இக்காலப்பகுதியில் இந்த மருந்தை மருத்துவர் குறித்துரைத்தவாறு நாளாந்தம் ஒரு அல்லது இரு அல்லது மூன்று தடவைகள் உட்கொள்ள நேரலாம்.

### நான் எத்தகைய பக்க விளைவுகள் சிலவற்றைக் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்?

- பி.சற்.எ. மருந்து உட்கொள்ளும் காலத்தில் அநேகருக்குப் பிரச்சனைகள் ஏற்படுவதில்லை.
- நீங்கள் பி.சற்.எ. மருந்தை உட்கொள்ளும் காலத்தில் உங்கள் மருத்துவர் உங்களைக் ஒழுங்காகக் கண்காணிக்க வேண்டியிருக்கும்.
- **பின்வரும் பக்க விளைவுகள் சில ஏற்படுவது வழக்கம்:**
  - வயிற்றுக் குழப்பம்/பசி இன்மை
  - மூட்டு வீக்கம் அல்லது நோ
  - தோல் வியாதி
  - சூரிய ஒளியினால் கூடிய தாக்கம்
- **பின்வருபவை இன்னும் கடுமையான பக்க விளைவுகள். அவற்றுள் எது தோன்றினாலும் மருந்து உட்கொள்வதை நிறுத்தி, உங்கள் மருத்துவருடன் தொடர்புகொள்ளவும்.**
  - சோர்வு/மிகுந்த களைப்பு
  - குமட்டல்/வாந்தி
  - வயிற்று வலி
  - பசி இன்மை
  - தோல் அல்லது கண்கள் மஞ்சள் நிறமாதல்
  - சிறுநீர் மிகவும் கடுநிறமாதல்
  - மூன்று நாட்களுக்கு அல்லது இன்னும் அதிக நாட்களுக்கு காய்ச்சல் காய்தல்

### காசநோய் மருந்து உட்கொள்வது பற்றிய குறிப்புகள்

- ஒவ்வொரு நாளும் ஒரே நேரத்தில் உங்கள் மருந்தை உட்கொள்ளவும். எடுத்துக்காட்டாக:
  - படுப்பதற்கு முன்னர்
  - காலையில் எழுந்தவுடன்
- வாராந்த மாத்திரைக் கலம் ஒன்றைப் பயன்படுத்தவும்
- நீங்கள் மாத்திரை உட்கொள்ளும் ஒவ்வொரு நாளையும் ஒரு நாட்காட்டியில் குறியிடவும்.
- உங்களுக்கு நினைவூட்டும்படி உங்கள் குடும்பத்தவர் அல்லது நண்பர் ஒருவரிடம் சொல்லி வைக்கவும்.
- நேரடிக் கவனிப்புச் சிகிச்சையைக் கருத்தில் கொள்ளவும்.

உங்கள் மருந்துகள் அல்லது காசநோய் பற்றி நீங்கள் ஏதாவது கேட்டறிய விரும்பினால், உங்கள் மருத்துவருடன் தொடர்புகொள்ளவும். அல்லது றொறன்ரோ பொது சுகாதாரத் துறையுடன் தொடர்புகொள்ளவும்: **416-338-7600**

மின்னஞ்சல்: **targettb@toronto.ca**
இணையத் தளம்: **www.toronto.ca/health/tb_prevention**

TORONTO Public Health



September 2011
PH1109SS212PTam